

திருச்சிக்கு புதிதாக வந்த மதுரை பெங்களூரு வந்தே பாரத் ரயிலை மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா கொடியசைத்து வரவேற்றார். அருகில் மாநகராட்சி மேயர் அன்பழகன் உட்பட அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

### மாநிலப் பாடத்திட்டம் தரம் தாழ்ந்தது என்ற தனது கூற்றை

# ஆளுநர் திரும்பப் பெற வேண்டும்! பொறுப்பில் இருந்து உடனடியாக விலகுக!

## பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு அறிக்கை!



**சென்னை, செப். 4 -**

**“மாநிலப் பாடத்திட்டம் தரம் தாழ்ந்தது (“State Board is very low...”)” என்ற தனது கூற்றை ஆளுநர் ஆர். என். இரவி திரும்பப் பெற வேண்டும். ஆளுநர் பொறுப்பில் இருந்து உடனடி விலக வேண்டும் என்று பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். இரவி அவர்கள் பள்ளி விழா ஒன்றில் பேசும் போது “தமிழ்நாடு பாடத்திட்டம் மிகவும் கீழ் நிலையில் உள்ளது” என்று பேசியிருப்பது அவர் வகிக்கும் பொறுப்பிற்கு மிகவும் கண்ணிய குறைவான செயல்.

ஆர். என். இரவி பேசியுள்ளது உண்மைக்கு புறம்பானது மட்டுமல்ல, மாணவர்களை மிகப் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் செயல்.

**ஆளுநரின் உரை அநாகரிகமானது!**

மாணவர்கள் அவர்தம் பெற்றோருக்கு தாழ்வு மனப்பான்மையை உருவாக்குவதுடன், தனியார் நடத்தும் மத்தியப் பாடத் திட்டப் பள்ளிகளை ஊக்குவிக்கும் தந்திரமிக்க உரை.

தமிழ்நாடு அரசு மாநிலப் பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்களிடம் அவர்கள் படிக்கும் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்றுப் பேசிய ஆளுநர், அப்பள்ளியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் “நமக்கு ஒரு பாடத்திட்டம் உள்ளது, அதை நீங்கள் பின்பற்று கிறீர்கள். அதைத் தாண்டி நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். ஏனெனில், நமது மாநிலத்தில் உள்ள பாடத்திட்டம், குறிப்பாக மாநிலப் பாடத்திட்டம் மிகவும் கீழ் நிலையில் உள்ளது” (*“We have a syllabus, which you follow. But, I urge you to think beyond it. Because (the) syllabus in our State, especially (that of the) State Board is very low...” The Hindu, Chennai Dated September 2,2024*) என்று கூறியுள்ளார். இந்த உரை மிகவும் அநாகரிகமானது.

பெண்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காக, தொண்டுள்ளம் கொண்ட பெரியவர்களால் உருவாக்கப்பட்டு, சென்னையின் முதன்மையான பெண்கள் பள்ளிகளில் ஒன்றாக திகழும் நூற்றாண்டுப் பழமை வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க அரசு உதவிபெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி நிர்வாகம், கடந்த நூறு ஆண்டுகளாக தரம் தாழ்ந்த பாடத்திட்டத்தை மாணவர்களுக்கு நடத்தி வருகிறதா? என்ற கேள்வியை எழுப்பும் உரையாக ஆளுநர் உரை அமைந்துள்ளது.

கடந்த நூறு ஆண்டுகளில் இந்த பள்ளி பின்பற்றும் மாநிலப் பாடத்திட்டத்தில் படித்த மாணவிகள் யாரும் எந்த பயனும் அடையாமல் போய்விட்டனரா?

இப்பள்ளியில் பின்பற்றும் மாநிலப் பாடத்திட்டத்தில் பயின்ற மாணவிகளின் அறிவு நம் சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயன்படாமல் போய் விட்டதா?

வடசென்னையின் மையப் பகுதியில் இயங்கி வரும், மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றும், நூற்றாண்டு பழமைவாய்ந்த பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் மாணவிகள் இந்திய சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு எந்த பங்களிப்பும் செய்யவில்லையா? என்ற கேள்வி களை ஆளுநர் உரை எழுப்புகிறது.

**எதன் அடிப்படையில் கூறுகிறார்?**

ஆளுநர் அவர்கள் மாநிலப் பாடத்திட்டம் மிகவும் தரம் தாழ்ந்தது (*State Board is very low*) என்று எதன் அடிப்படையில் கூறு கிறார்?

தரத்தை அளக்க என்ன அளவுகோல் ஆளுநரால் பயன்படுத்தப்படுகிறது?

மாநிலப் பாடத்திட்டத்தை எந்த பாடத்திட்டத்துடன் ஒப்பாய்வுச் செய்தார்? எப்போது செய்தார்? எந்த வகையில் தரம் தாழ்ந்து இருப்பதாக கண்டறிந்தார்?

மாநிலத்தின் தலைவராக உள்ள ஆளுநர், அவ்வாறு ஆய்வுகள் மேற்கொண்டு இருந்தால், தான் ஆய்ந்தறிந்தவற்றை மாநில அரசின் பள்ளிக் கல்வித் துறையிடம் தெரிவித்தாரா? ஒப்பீட்டு ஆய்வறிக்கையை மாநில அரசிடம் வழங்கி கருத்து கோரினாரா?

இவை எதையுமே ஆளுநர் செய்ததாக அவரே கூறவில்லை. தான் பார்த்தாக (“*I can see*”) கூறுவதற்கும், தான் ஆராய்ந்து அறிந்துக் கொண்டதாக கூறுவதற்கும் பெரும் வேறுபாடு உள்ளது.

மாநிலப் பாடத்திட்டம் போட்டிகளுக்கு தகுதியானதாக இல்லை என்ற விமர்சனத்தை போகிறபோக்கில் பொத்தாம் பொதுவாக வைப்பது மாநிலப் பாடத்திட்டத்தைச் சிறுமைப்படுத்தும் நோக்கம் கொண்டது.

**படிக்கத் தவறிவிட்டாரா ஆளுநர்?**

என்.சி.இ.ஆர்.டி. (NCERT) தயாரித்த இயற்பியல் பாடப் புத்தகம் அணு குறித்து 2017யில் ஒரு விதமாகவும் 2020க்கு பின்னர் வேறு விதமாகவும் உள்ளதாக தேசிய தேர்வு முகமை (NTA) உச்ச நீதிமன்றத்தில் “நீட்” முறைகேடுகள் தொடர்பான வழக்கில் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் கூறியுள்ளது.

வேறு வழி இல்லாமல் இரண்டு வகையான விடைகள் மாணவர்கள் எழுத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, அதன் விளைவாக இரண்டு விதமான பதில்களுக்கும் மதிப்பெண் வழங்கப்பட்டதாக தேசியத் தேர்வு முகமை தெரிவித்தது.

ஒரு கேள்விக்கு ஒரு பதில் தான் இருக்க முடியும் என்று கருதிய உச்ச நீதிமன்றம், எது சரியான விடை என்று கண்டறிய தில்லி ஐஐடியை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டதை உலகமே பார்த்து சிரித்தது என்ற செய்தியை ஆளுநர் ஆர். என்.இரவி படிக்கத் தவறிவிட்டாரா?

தேசிய தேர்வு முகமையால் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டு, கேள்வியை தயார் செய்த அமைப்பு, “இதுதான் இந்த கேள்விக்கு விடை” என்று திட்டவட்டமாக கூற முன்வரவில்லை.

கேள்வியை தயார் செய்தவருக்கு எது சரியான விடை என்று தெரியவில்லை. பாடநூலில் உள்ளதைத் தான் சரியான விடையாக எடுத்துக் கொள்கிறார்.

இவ்வளவுதான் என்சிஇஆர்டி (NCERT) மற்றும் தேசிய தேர்வு முகமை (NTA) ஆகியவற்றின் தரமும் தகுதியும். இப்படிப்பட்ட அமைப்புக் கள்தான் மருத்துவப் படிப்பிற்கு தகுதியான மாணவர்களை கண்டறிவார்களாம்.

**ஆளுநர் ரவி பதில் சொல்வாரா?**

அணுவின் நிலைத் தன்மை குறித்து 2017க்கு பின்னர் ஏதாவது புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளதா?

2017க்கு முன் இருந்த அணு நிலைத்தன்மை குறித்து புரிதலில் 2017 க்கு பின்னர் ஏதாவது மாற்றம் நிகழ்ந்துள்ளதா?

அவ்வாறு இல்லை என்றால் எப்படி 2017க்கு முன் இருந்த என்சிஇஆர்டி பாடப் புத்தகம் ஒரு விதத்திலும், 2017 க்கு பின்னர் உருவான என்சிஇஆர்டி பாடப் புத்தகம் வேறு விதத்திலும் அணு குறித்து எழுதியிருக்க முடியும்.

இதைப் பின்பற்றிய சிபிஎஸ்இ பள்ளி மாணவர்களில் யார் தரமானவர்கள்? 2017 க்கு முன் படித்தவர்களா? பின்னர் படித்தவர்களா?

இந்த கேள்விகளுக்கு ஆளுநர் ஆர். என். இரவி பதில் சொல்ல வேண்டும்.

தமிழ்நாட்டில் மாணவர்கள் மனங்களில் தாழ்வு மனப்பான்மை உருவாகக் கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில் கல்வி சமச்சீராக இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு பாடத்திடத்தை உருவாக்கியது.

மாநிலப் பாடத்திட்டம் தரமற்றது என்று தொடுக்கப் பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம், அதை தொடர்ந்து உச்சநீதிமன்றமும் மிக ஆழமாக ஆராய்ந்து, விவாதித்து, தனது தீர்ப்பில் தமிழ்நாடு மாநிலப் பாடத் திட்டம் தரமற்றது என்ற வாதத்தை நிராகரித்து, மாநிலப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டது.

மாநிலப் பாடத் திட்டத்தை மாநில அரசு தொடர்ந்து செழுமைப்படுத்தி வருவதுடன், பல புதிய அம்சங்களை இணைத்து மாணவர்களுக்கு படிக்கும் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடநூல்கள் தயாரிக்கிறது.

**அவதூறு பரப்பும் உரை கண்டனத்திற்குரியது!**

தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) என்ற ஒரு சூழ்ச்சி வலையில் மாணவர்கள் சிக்கித் தவிக்கும் நிலையில், எத்தகையப் போட்டியையும் எதிர்கொள்ளும் உள்ளடக்கம் கொண்டதாக பாடநூல்கள் மாநில அரசால் தயாரிக்கப்பட்டுள்ளச் சூழலில், மாணவர்களிடையே ஆளுநர் நிகழ்த்தி யுள்ள, எந்த வித அடிப்படை ஆய்வும் இல்லாத, அவதூறு பரப்பும் உரை கண்டனத்திற்குரியது.

தமிழ்நாடு அரசு பல்கலைக் கழகங்கள், அதன் ஏற்பில் இயங்கும் பல நூறு கல்லூரிகள், இவற்றில் பயிலும் பல இலட்ச மாணவர்களில் பெரும் பகுதியினர் மாநிலப் பாடத்திட்டத்தில் பயின்றவர்கள்.

விண்வெளி ஆய்வில் கோலோச்சும் இஸ்ரோ விஞ்ஞானிகள் பலரும் மாநிலப் பாடத்திட்டத்தில், மாநில அரசுக் கல்லூரிகளில் பயின்றவர்கள்.

மிகப் பெரும் அளவில் துறை சார்ந்த ஆளுமைகளை உருவாக்கித் தந்துள்ளதன் மூலம் இந்திய அறிவியல், பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டு செய்துள்ளது மாநில அரசுப் பள்ளிகளும் அதில் பின்பற்றப்படும் மாநிலப் பாடத்திட்டமும்.

**பதவி விலகுக!**

ஆளுநர் என்ற பதவியை வகிப்பதனால், பதவி வழிப் பொறுப்பாக தமிழ்நாடு மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக பொறுப்பு வகிக்கும் திரு. ஆர். என். இரவி அவர்கள், பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை அனைத்து நிலையிலும் செயல்படும் தமிழ்நாடு மாநில ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை மிகவும் சிறுமைப்படுத்தும் விதமாக பேசியுள்ளார்.

குழந்தைப் பருவ மாணவர்களிடம் பாடத்திட்டம் குறித்த தவறான விமர்சனங்களை முன்வைத்ததின் விளைவாக, மாநிலப் பாடத்திட்டதில் பயிலும் மாணவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கி உள்ளார். மன ரீதியாகவும், அதன் விளைவாக உடல் ரீதியாகவும் மாணவர்கள் பாதிப்படையும் வகையில் பேசப்பட்டப் பேச்சு கண்டனத்திற்குரியது.

“மாநிலப் பாடத்திட்டம் தரம் தாழ்ந்தது (“*State Board is very low...*”)” என்ற தனது கூற்றை ஆளுநர் ஆர். என். இரவி அவர்கள் திரும்பப் பெற வேண்டும் அல்லது ஆளுநர் பொறுப்பில் இருந்து உடனடி விலக வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி, புதுக்கோட்டை வடக்கு, தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர். சாமிநாதன் ஆகியோர் வரவேற்பில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையில் பெருங்களூர் பிடாரி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ., எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகர், செ.அசோக் பாண்டியன், ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், எம்.எம்.பாலு, மு. கலியமூர்த்தி, எம்.சுப்பையா, வ.ஜி.ஆர்.மணி வண்ணன், வி.என்.பாலு, டி.எம்.ஆர்..ராமமூர்த்தி, எஸ். வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, ஆர்.சபாபதி, டி.முரளிதரன், சொ.தமிழினியன் மற்றும் பலர் பங்கேற்றனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் மொரப்பூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மா.ரத்தினவேல் ஏற்பாட்டில் மொரப்பூர் மேற்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் தருமபுரி எம்.பி.ஆ.மணி ஆகியோர் கலந்து கொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினர்.உடன் மாநில நிர்வாகிகள் கீரை விஸ்வநாதன்,ராஜேந்திரன்,மாவட்ட அவைத் தலைவர் கே.மனோகரன்,மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார்,மொரப்பூர் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் பன்னீர்செல்வம், ஒன்றிய கழக நிர்வாகிகள் மாதம்மாள், ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி, மலர், லதா, கோவிந்தசாமி, மாதவன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக, நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### பாராலிம்பிக்ஸ் - 2024 இல்

# வெள்ளிப்பதக்கம் வென்ற துளசிமதி முருகேசனுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!

சான்பிரான்சிஸ்கோ, செப் 4 -

தமிழ்நாட்டைச் சேர்ந்த துளசிமதி முருகேசன் பாராலிம்பிக்ஸ் பேட் மிண்டனில் வெள்ளிப்பதக்கம் வென்றதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

வெள்ளிப் பதக்கம் வென்ற துளசிமதி முருகேசனுக்கு வாழ்த்து! பாராலிம்பிக்ஸ் 2024இல் வெள்ளிப் பதக்கம் வென்றதற்குத் துளசிமதி முருகேசன் அவர்களுக்கு வாழ்த்துகள்!

உங்களின் அர்ப்பணிப்பும், எதிலிருந்தும் மீண்டு வரும் பண்பும், தளராத மனப்பான்மையும் லட்சக்கணக்கானோரை ஊக்கமாக அமைந்துள்ளது. உங்கள் வெற்றியில் பெருமை கொள்கிறோம்!

**வெண்கலம் வென்ற மனிஷா ராமதாஸ்க்கு வாழ்த்து!**

மேலும் வெண்கலம் வென்ற மனிஷா ராமதாஸ்க்கு சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:

பாராலிம்பிக்ஸ் 2024இல் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள மனிஷா ராமதாஸ் அவர்களுக்கு வாழ்த்துகள்!

உங்கள் மனவலிமையும் உறுதிப்பாடும் தேசத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. எப்போதும் ஜொலித்துக்கொண்டே இருங்கள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# பா.மணிமாறன் இல்ல மணவிழா! மு.சண்முகம் எம்.பி. தலைமையில்!

## அமைச்சர் பெருமக்கள் – கழக முன்னணியினர் வாழ்த்துரை!



சென்னை, செப். 4 -

தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநில பொதுச் செயலாளர் பா.மணிமாறன் - ம.விஜயலட்சுமி ஆகியோரின் புதல்வி ம.மதுமிதாவுக்கும், தூத்துக்குடி மாவட்டம், புங்கவர் நத்தம் ஏ.என்.தேன்ராஜ் - (நினைவில் வாழும்) டி. பெத்தனாட்சி - நலமுடன் டி.தங்கம்மாள் ஆகியோரின் புதல்வர் தே.காத்தவராயனுக்கும் மணவிழா 6.9.2024 - வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வேலப்பன்சாவடி, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கே.வி.என். கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துகளுடன் நடைபெறும் இம் மணவிழாவிற்கு தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி. தலைமை வகித்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமை கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்க பேரவை நிர்வாகிகள்,

மாநகர மேயர்கள், துணை மேயர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் அனைத்து வட்டக் கழகச் செயலாளர்கள், மாநகர மாமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர், முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து கழக முன்னோடிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, செப். 4 -

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளவிடுதி, மங்களாகோவில் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 30.08.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். அமைச்சர் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை பதிவு செய்திடும் வகையில், “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்திடும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கந்தர்வக் கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளவிடுதி,


மங்களாகோவில் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்கள் கேட்டறியப்பட்டது. எனவே பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய பரிசீலனை செய்து தீர்வு காண வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

பின்னர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சுந்தரவ க் கோட்டை ஊராட்சி ஒன்றியம், அண்டனூர் ஊராட்சி, மஞ்சம்பட்டி முத்துமாரியம்மன் கோவில் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர் மின் கோபுர விளக்கினையும், வெள்ளாளவிடுதி ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலைய பயணியர் நிழற்குடையினையும், ஆதிதிராவிடர் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியினையும், திருக்கட்டளை ஊராட்சியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள மின்மாற்றியினையும் திறந்து வைத்தார். மேலும், கல்லாக் கோட்டை ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் பசுமை பள்ளி பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து, பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்வுகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல் , கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், கந்தர்வக்கோட்டை ஒன்றியக்குழுத் தலைவர் கார்த்திக் (எ) இரா.ரெத்தினவேல், மங்களாபுரம் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், நியூஸ் ராஜேந்திரன், எம்.ஆர். கே.முருகேசன், எஸ்.ஆர். கலையரசன், குஞ்சப்பா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய அளவிலான பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மத்தூர் வடக்கு , தெற்கு ஒன்றியங்கள் , ஊத்தங்கரை வடக்கு தெற்கு மத்தியம் ஒன்றியங்கள், ஊத்தங்கரை பேரூர், பர்கூர் வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், காவேரிபட்டிணம் தெற்கு ஒன்றியம், போச்சம்பள்ளி ஒன்றியம், பர்கூர் பேரூர் உள்ளிட்ட ஒன்றியங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றியச் செயலாளர்கள் குண.வசந்த அரசு, நரசிம்மன், ரஜினி செல்வம், குமரேசன், எக்கூர் செல்வம், ராஜேந்திரன், அறிஞர், மகேந்திரன், சாந்தமூர்த்தி, பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், தம்பிதுரை, ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டங்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகவனம், வெற்றிச்செல்வன், முன்னாள் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன்,மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் மாநில விவசாய துணை செயலாளர் வெங்கடேசன், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதிநாராயணசாமி, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம் காந்தலவாடி கிராமத்தில் இருந்து பா.ம.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் வடக்கு மாவட்ட கழக அவை தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்றக் குழு உறுப்பினர், ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்து குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.